உ

சிவமயம்.

நீதிநெறிவிளக்கக் கீர்த்தனம்.

சென்னை-சூளை

ஸ்ரீ "பாரதி" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1923.



சிவமயம்.

௧

நீதிநெறிவிளக்கக் கீர்த்தனம்.

நேரிசை-வெண்பா.

சீராருஞானச் செழுஞ்சுடரா யன்பர்களுக்
காராவமுதமா யாரணமா-யேராரு
மூச்சுடராய் முச்குணமாய் முப்பொருளாய்நின்ரெளி
அச்சுதனர் பூங்கழற் காப்பாம். [ரும்

தரு-புன்னுகவராளி ராகம்-ஆதிதாளம்.

நல்லவருடன்கூடு மனமே
நாரணன்புகழ்பாடு

கல்லைப்பெண்ணாக்கிய காகுத்தன்பதங்களை
அல்லும்பகலும்போற்று அபலருறவைவிட்டு நல்

பெண்டாட்டிபேச்சைகேட்டு பெற்றவளைமொத்துகி
ன்ற, சண்டாளருறவைத் தாரணிதனில்விட்டு நல்

வாத்தியார்கூலியை வாயிற்போட்டுக்கொண்டு
கூத்தியாருக்குக்கொடுக்குங் கொடியருறவைவிட்டு நல்

சுத்தமான தாய்தந்தைக்கு சோருதண்ணீர்காட்டாமல்
உற்றபெண்டுபிள்ளைகளோ டுண்ணும்பாதகரைவிட்டு.

பெண்டாட்டியுடன்சேர்ந்த பேச்செல்லாம்பிறருக்குக்
கொண்டாட்டமாயுரைக்குங் கொடியருறவைவிட்டு.

கொண்டவள்கைசோற்றைவிட்டுக் கூததியார்கைசோ
ற்றை, உண்டுகாலங்கழிப்போ ருறவையுலகில்விட்டு.

பத்துமாதந்தாங்கிபெற்றுப் பால்கொடுத்துவளர்த்த
பெற்றதாய்க்குக்கஞ்சிவாராப் பெரும்பாவிகளைவிட்டு.

ஊழ்வினைநீங்குங்கதைகண் மூதுலகிற்கேளாத [விட்டு.
கோள்களைக்கேட்கச்செவியைக் கொடுக்கும்பேர்களை

சந்திசபதபஹோமம் சாஸ்திரங்கள்யாவும்விட்டு
அந்திபகல்கடிதாசி யாடும்பாதகரைவிட்டு. நல்

பெற்றவளைதிட்டுதற்குப் பெண்டாட்டிக்குநன்றாகக்
கற்றுக்கொடுக்குங்கொடிய கயவருறவைவிட்டு. நல்

தாய் பெண்ணுக்கு புத்தி சொல்லுதல்.

சேரவேண்டாமயிலே யென்சொல்புத்தியை
செவ்வையாய்க்கேள் தையலே.

நாரணனுதிதெய்வம் நாயகனேயென்று
நம்பும்பெண்களோடல்லால் நலமிலாப்பெண்களுடன்
விடியற்காலத்தெழுந்து வீட்டுவேலைபாரரமல்
தடிபோலத்தூங்குகின்ற தகையிலாபெண்களுடன்
காமனுரைப்போலேதன் கணவனைப்பெற்றெடுத்த
மாமனுர்க்குக்கஞ்சிவாரா மாபாவிகளுடனே சே
எட்டுவீட்டுசண்டையைத் தானிருக்கும்வீட்டிலிருந்
தே, சட்டமுடனிழுக்கின்ற தண்டுபஜாரிகளுடன் சே
மாப்பிள்ளைக்கொருவிதமு மச்சினர்க்கொருவிதமும்
சாப்பாட்டில்வஞ்சனைசெய் சதிகாரப்பாவிகளுடன்.
மாமியாற்கெதிரில்காலை மடக்காமல்நீட்டிக்கொண்டு
சாமியாரைப்போலிருக்குஞ் சறுதார்பெண்களுடனே.
ஓரகத்திநாத்திஞரை யோரவஞ்சகஞ்செய்து
தீரமுடன்சிலுவாணஞ் சேர்க்கும்பெண்களுடனே சே
சாக்கெட்டுபோம்படி நாயையும்பூனையையும்
சாக்கிட்டுவைவதில்முதற் ரும்பூலம்வாங்குவோரை.

ஒருநாளுக்கொருவர்க்கன்பாய் உவந்திட்டசோற்றை
பலநாளுமேச்சிக்காட்டும் பாவைமாருடனேநீ சே

கள்ளப்புருடருடன் கலந்ததினுற்கிடைத்தப்
பிள்ளைகளைக்கரைக்கும் பெரும்பாவிகளுடனே சே

புருஷன்மடியிற்கையைப் போட்டுநடுத்தெருவில்
வருவார்போவார்சிரிக்க வம்பாடும்பெண்களுடன் சே

வாயில்வருவதெல்லாம் வர்ணுச்சாரமில்லாமல்
நாய்போல்குலைக்கின்ற நயமிலாப்பெண்களுடன் சே

கொண்டவனடித்தாற் கூடையினலடித்து
அண்டையயலறிய அழுகின்றபெண்களுடன் சே

தன்னிடத்திலேகுற்றங்கள் ஜாஸ்தியாய்வைத்துகொ
ண்டு, அந்நியர்குற்றம்எடுத்து அதிகம்பேசும்பெண்கள்

அண்டைவீட்டுக்காரிக்கவாளாண்புடையானவைகசெய்
தால், கண்டுசகிக்காமலேதன் கணவனைக்காய்பவளை

மாத்தரையில்துன்மார்க்க வார்த்தைகளைப்பேசுகின்ற
கூத்துகளைபோய்பார்க்கும் கொடியபெண்களுடனே

கணவன்சம்பாதனையைக் கண்டுசெலவுசெய்து
கணவனைமீத்தாமல் கடன்காரராக்குவோரை சே

அண்டைவீடெதிர்வீடு எல்லாவீடும்நுழைந்து
சுண்டுகறிபதப்பார்க்குஞ் சுறணைகெட்டவருடன் சே

பூர்த்தியாய்வீட்டில்திருடும் பொருள்களையண்டைவீட்
டில், சேர்த்துவைத்து மோசம்பொருந்தியபெண்க
ளுடனே சே

ஊற்றைப்பல்லைவிளக்காமல் உதையத்தெழுந்திருந்து
சோற்றுப்பானைதொடுகின்ற சுறணைக்கெட்டவருடன்.

அன்புடையகறிசோறு அமாவாசைக்காக்கிவைத்து
பின்புதலைமுழுகுமப் பீடைபிடித்தவளுடன் சே

வீட்டில்மாமியாரைத் தெருவிளக்குந்துடப்பத்தைக்
காட்டிகாட்டிதிட்டுகின்ற கடைகெட்டவளுடனே.

கனிவுள்ளபுருஷனைக் கண்டபடிதிட்டியூர்க்குத்
தனிவழியோடுகின்ற சண்டாளப்பெண்களுடன் சே

தாய்தந்தைபேச்சைதள்ளி தன்பேச்சைகேட்பானெ
ன்று,வாய்சோற்றில்கணவர்க்கு மருந்திடும்பாவியுடன்.

இதுவுமது.

புன்னுகவராளிராகம்-ஆதிதாளம்.

நல்லமழை பெய்யுமம்மா-கருப்புநீங்கி
நாடு செழிக்குமம்மா.

இல்லாதவனுயினு மிருப்பவனுயினும்
கல்லாதவனுயினுங் கணவனைப்பூசித்தால் நல்ல

வேறொருத்தியைக்கணவன் விரும்பினபோதிலும்
மறுவார்த்தைசொல்லாதே மனைவியாளிருந்தாக்கால் ந

தன்னுடையநகைகளை சக்களத்திக்கிகென்றாலும்
நன்னயமாகக்கொடுக்கும் நாயகிகளிருந்தாக்கால் நல்

மாமனாரைமாமியாரை மாநிலத்தில்தெய்வமென்று
பூமலர்க்கொண்டர்ச்சிக்கும் பூவைமார்களிருந்தால் ந

காலையிலெழுந்திருந்து கணவனடிபணிந்து
சீலமுடன்வீட்டுவேலை செய்யும்பெண்களிருந்தால் நல்

தன்குழந்தையைப்போலும் சக்களத்திபெற்றதை
இன்பமுடன்பார்க்கின்ற யேந்திழைமாரிருந்தாள் நல்

நாயகனடித்தாலும் நடுவொன்றும்பேசாமல்
வாய்மூடிக்கொண்டிருக்கும் வனிதையரிருந்தால் நல்

வந்தவிருந்தினரை மகிழ்வோடுபசரித்து
அந்தமுள்ளநற்புகழை யடையும்பெண்களினால் நல்ல

சத்தியந்தயாளதர்மம் சாந்தமுதலான
உத்தமகுணங்களை யுடையபெண்களிருந்தால் நல்ல

மாமழிசைஜெகநாதன் வழுத்துநீதியின்படி
பூமியில்நடக்குமென்னைப் புரக்குந்தாய்மார்களாலே.

நீதிநெறிவிளக்கக் கீர்த்தனம்
முற்றுப்பெற்றது.